## October 31, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீதான வரியை 57 சதவீதத்திலிருந்து 47 சதவீதமாக அமெரிக்கா குறைத்துள்ளது. தென்கொரியாவின் புசான் நகரில் சீன அதிபர் ஷி ஜின்பிங்குடனான சந்திப்புக்குப் பிறகு இது தொடர்பான அறிவிப்பை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வெளியிட்டார்.

   i. ஆசிய-பசிபிக் பொருளாதார உச்சி மாநாடு புசான் நகரில் நடை பெற்றது. இந்த மாநாட்டுக்கு இடையே, டிரம்ப்-ஷி ஜின்பிங் சந்தித்து பேச்சுவார்த்தையை நடத்தினர். சுமார் ஒரு மணி நேரம் 40 நிமிஷங்கள் நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, அமெரிக்கா திரும்பும் முன்பாக செய்தியாளர்களிடம் டிரம்ப் கூறியதாவது:
   ii. சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் நடத்திய பேச்சுவார்த்தை மிகப் பெரிய வெற்றி. அரிய கனிமங்கள் மீதான கட்டுப்பாடுகளைத்தளர்த்தி அனுமதிக்கவும், ஏற்றுமதியை அமெரிக்காவிடமிருந்து சோயா பீன் பயறுகளை வாங்கவும் சீனா ஒப்புக்கொண்டது.
   iii. இதன் காரணமாக, கடுமையான வலிகளைக் குறைக்க உதவும் ஃபெண்டானில் மருந்தில் பயன்படுத்தப்படும் ரசாயனத்தின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைக்கு தண்டனையாக சீனாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் பொருள்கள் மீது விதிக்கப்பட்ட ஒட்டுமொத்த 57 சதவீத வரி தற்போது 47 சதவீதமாக குறைக்கப்படும்.
   iv. அமெரிக்காவிலிருந்து மேலும் அதிக அளவில் அதிநவீன கணினி சிப்புகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.
   v. சீனாவுடன் விரைவில் வர்த்தக ஒப்பந்தத்திலும் அமெரிக்கா கையொப்பமிட உள்ளது.

2. உச்சநீதிமன்றத்தின் 53-ஆவது தலைமை நீதிபதியாக சூர்ய காந்த் நியமிக்கப்பட்டார். அவர் வரும் நவம்பர் 24- ஆம் தேதி பதவி ஏற்பார்.

   i. இதுதொடர்பான அறிவிக்கையை மத்திய சட்ட அமைச்சகத்தின் கீழ் இயங்கும் நீதித் துறை வெளியிட்டது.
   ii. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருக்கும் பி.ஆர்.கவாய் வரும் நவம்பர் 23-ஆம் தேதி ஓய்வு பெற உள்ளார். அதைத் தொடர்ந்து, புதிய தலைமைநீதி பதியாக பதவியேற்கும் சூர்ய காந்த், அடுத்த 15 மாதங்கள் அந்தப் பதவியை வகிப்பார். 2027- ஆம் ஆண்டு பிப்ரவரி 9-இல் பணி ஓய்வு பெறுவார்.

3. அமெரிக்காவில் நடைபெற்ற கிளட்ச் செஸ் போட்டியில், உலகின் நம்பர் 1 ஆட்டக்காரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சென் சாம்பியன் ஆனார். நடப்பு உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ் கடைசி இடம் பிடித்தார்.

4. சென்னையை சேர்ந்த 16 வயது இளம்பரிதி, செஸ் விளையாட்டின் கிராண்ட்மாஸ்டர் அந்தஸ்தை அடைந்தார். இந்தியாவிலிருந்து உருவான 90-ஆவது கிராண்ட்மாஸ்டர் அவர். ஈலோ புள்ளிகளில் 2,500-ஐ கடந்துவிட்டார்.

5. 23 ஆண்டுகளுக்குபின் இந்தியாவில் மீண்டும் உலகக் கோப்பை செஸ் போட்டி நடைபெறவுள்ளது. 8 சுற்றுகள் கொண்ட இதில் நாக் அவுட் முறையில் நடைபெறும். தலைசிறந்த 50 வீரர்கள் முதல் சுற்றில் பை பெற்றுள்ளனர்.

   i. இந்திய அணியில் டி. குகேஷ், அர்ஜுன் எரிகைசி, பிரக்ஞா னந்தா, நிஹால் சரீன் உள்ளனர். சர்வதேச வீரர்களில் ஜெர்மனியின் வின்சென்ட் கீமர், நெதர்லாந்தின் அனிஷ் கிரி, அமெரிக்காவின் வெஸ்லி சோ, லெவோன் ஆரோனியன், சீனாவின் வெய் யி பங்கேற்கின்றனர்.

6. இந்தியாவின் மின் உற்பத்தித் திறன் 500 ஜிகாவாட் அளவைக் கடந்துள்ளது. இதில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பிரிவின் பங்களிப்பு 50 சதவீதத்துக்கும் மேல் உள்ளது. கடந்த செப்டம்பர் 30- ஆம் தேதி நிலவரப்படி அது 500.89 ஜிகாவாட்டாக உள்ளது.

i. மதிப்பீட்டு காலத்தில் நீர் மின்சாரம், அணுசக்தி உள்ளிட்ட புதை பொருள் அல்லாத ஆதாரங்களில் இருந்து மேற்கொள்ளப்படும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மேற்கொள்ளப்பட்ட மின்உற்பத்தி 256.09 ஜிகாவாட்டாக உள்ளது. இது மொத்த மின் உற்பத்தித் திறனில் 51 சதவீதத்திற்கும் மேல். புதைபொருள் அடிப்படையிலான மின்உற்பத்தி 244.80 ஜிகாவாட்டாக உள்ளது. இது மொத்த உற்பத்தித் திறனில் 49 சதவீதம்.

ii. இதன் மூலம், 2030-க்குள் நாட்டின் மொத்த மின் உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தை புதைபொருள் அல்லாத ஆதாரங்களில் இருந்து பெற வேண்டும் என்று ஐ.நா. பருவநிலை மாநாட்டில் இந்தியா நிர்ணயித்த இலக்கு ஐந்து ஆண்டுகள் முன்னதாகவே எட்டப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. சுமார் 30 ஆண்டுகளாக நிறுத்திவைத்திருந்த அணு ஆயுத சோதனைகளை மீண்டும் நடத்துமாறு பாதுகாப்புத் துறைக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

i. அணுசக்தி மூலம் வரம்பற்ற தொலைவு செல்லும் ஏவுகணை, நீர்மூழ்கி ட்ரோன் ஆகியவற்றை ரஷியா வெற்றிகரமாக சோதித்துள்ள நிலையில், டிரம்ப் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ii. அமெரிக்காவின் கடைசி முழு அணு ஆயுத சோதனை, 'டிவைடர்' என்ற பெயரில் 1992 செப்டம்பர் 23-ஆம் தேதி நவாடா சோதனை தளத்தில் நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு நாட்டில் அணு ஆயுத சோதனைகளுக்குத் தடை விதிப்பதாக அப்போதைய அதிபர் ஜார்ஜ் ஹெச்டபிள்யு புஷ் அறிவித்தார். இருந்தாலும், நவாடா சோதனை தளத்தில் அணு ஆயுத சோதனைகளை மீண்டும் நடத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

iii. உலகிலேயே ரஷியாவிட்மதான் அதிக எண்ணிக்கையில் அணு ஆயுதங்கள் உள்ளன. ரஷியாவிடம் 5,500-க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் உள்ளன. அமெரிக்காவிடம் 5,044 உள்ளன என்று அணுஆயு தங்கள் ஒழிப்புக்கான சர்வதேச இயக்கத்தின் புள்ளி விவரங்கள் தெரி விக்கின்றன.

8. இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபபாய் படேலின் 150-ஆவது பிறந்த ஆண்டை முன்னிட்டு, 'பாரதத் திருவிழா 2025' என்ற தேசிய அளவிலான கொண்டாட்டம் நவம்பர் 1 முதல் 15-ஆம் தேதி வரை நடைபெறும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிவித்தார்.

9. ராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடியில் 500 மெகாவாட் காற்றாலை மின்உற்பத்தித் திட்டம் விரைவில் நிறுவப்படும் என மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

i. தமிழகத்தில் தனுஷ்கோடியிலும் குஜராத்திலும் தலா 500 மெகாவாட் திறன் கொண்ட கடற்கரை காற்றாலை மின்உற்பத்தி திட்டங்களுக்கான ஒரு சாத்தியமான நிதித் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இது கிட்டத்தட்ட ரூ.7,500 கோடி மதிப்புள்ள திட்டம்.